**பாடம் - 15** | **الدرس الخامس عشر**

## நபிகளார் வரலாற்றிலிருந்து முக்கிய நிகழ்வுகளும், படிப்பினைகளும்

## مواقف وعبر من سيرته ﷺ

**நபிகள் நாயகத்தின் நகைச்சுவை -** நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் நகைச்சுவையாகப் பேசுவார்கள்ளூ தமது மனைவியரிடம் விளையாடுவார்கள். தமது நேரத்தில் சிறுவர்களுக்கென ஒரு பகுதியை ஒதுக்கி அவர்கள் விஷயத்தில் அக்கரை செலுத்துவார்கள். அவர்களால் தாங்க இயலுமான காரியங்களையே அவர்கள் மீது சுமத்துவார்கள். அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அவர்களிடம் உரையாடுவார்கள். தமது பணியாள் அனஸ் பின் மாலிக்(ரலி) யிடமும் வேடிக் கையாகப் பேசுவார்கள். சில நேரங்களில் 'இரு காதுகள் உடையவரே!' என்று அவரை அழைப்பார்கள். (பார்க்க: திர்மிதி-1992).

ஒரு மனிதர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் வந்து, 'எனக்கு ஒரு வாகனம் தாருங்கள்' என்று கேட்டார். அதற்கவர்கள், 'உமக்கு ஒட்டகக் குட்டி ஒன்று தருவோம்' என்று (வேடிக்கையாகக்) கூறினார்கள். அம்மனிதர் 'ஒட்டகத்தின் குட்டியை வைத்து நான் என்ன செய்ய முடியும்?' என்று கேட்டார். அப்போது நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள், 'ஒவ்வொரு ஒட்டகமும் இன்னொரு ஒட்டகத்தின் குட்டிதானே!' என்றார்கள். (அபூதாவூத்-4998)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தம் தோழர்களின் முகங்களைப் பார்த்து எப்போதும் மகிழ்ச்சியுடன் புன்னகை பூப்பார்கள். நபிகள் நாயகத்திடமிருந்து அவர்கள் நல்ல வார்த்தையைத்தான் செவியேற்பார்கள். ஜரீர்(ரலி) அறிவிக்கிறார்கள்: 'நான் இஸ்லாத்தை ஏற்ற நாளிலிருந்து நபிகள் நாயகத்தை நான் பார்ப்பதை விட்டும் எந்த நேரத்திலும் அவர்கள் என்னைத் தடுத்ததில்லை. புன்னகையின்றி அவர்கள் என்னைப் பார்த்ததில்லை. 'என்னால் குதிரையில் நிலையாக இருக்க முடிவில்லையே' என நான் அவர்களிடம் முறையிட்டபோது, 'இறைவா! இவரை உறுதிப்படுத்து இவரை நேர்வழி பெற்றவராகவும் நேர்வழி காட்டுபவராகவும் ஆக்கு' என்று பிரார்த்தித்தவாறு என் நெஞ்சில் கையால் தட்டிக் கொடுத்தார்கள். அதன் பிறகு நான் குதிரையிலிருந்து விழுந்தது கிடையாது.' (பார்க்க்: புகாரி (3036) முஸ்லிம் (2475)

அதுபோல நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தமது உறவினர்களுடனும் வேடிக்கையாகப் பேசுவார்கள். ஒரு முறை தமது மகள் ஃபாத்திமாவுடைய வீட்டுக்கு வந்தபோது அங்கு அவரது கணவர் அலீ(ரலி)வீட்டில் இல்லாததைக் கண்டு 'எங்கே அவர்?' என்று கேட்டார்கள். அதற்கு ஃபாத்திமா(ரலி), 'எங்கள் இருவருக்குமிடையில் தகராறு ஏற்பட்டதனால் அவர் என்னிடம் கோபித்துக் கொண்டு சென்று விட்டார்' என்று கூறினார். பிறகு அவரைத் தேடி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பள்ளி வாசலுக்கு வந்தபோது அங்கு அவர் படுத்திருந்தார். அவரது மேலாடை தரையில் விழுந்து கிடந்தது. அவரது உடலில் மண் படிந்திருந்தது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அந்த மண்ணனைத் துடைத்தவாறு 'அபுத் துறாப் - மண்ணின் தந்தையே எழுந்திரும்! மண்ணின் தந்தையே எழுந்திரும்!' என்று கூறினார்கள். (பார்க்க: புகாரி-3703)

**சிறுவர்களுடன் நடந்து கொண்ட விதம் -** நபிகள் நாயகம்(ஸல்) சிறுவர்களுடனும் அதிக அளவு நற்குணத்துடன் நடந்து கொண்டார்கள். தமது மனைவி ஆயிஷா(ரலி) உடன் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர் தமது தோழிகளுடன் விளையாடுவதையும் அனுமதித்துள்ளார்கள். ஆயிஷா(ரலி) அறிவிப்பதாவது: 'நான் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் இருக்கும்போது பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண் டிருப்பேன். என்னுடன் விளையாடுவதற்கு சில தோழிகளும் இருந்தனர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் (வீட்டுக்குள்) நுழையும்போது அவர்கள் ஓடி ஒளிந்து கொள்வர். நபியவர்கள் அவர்களை (என்னுடன் விளையாட) திருப்பி அனுப்புவார்கள். அதன் பின் அவர்கள் என்னோடு விளையாடுவார்கள்.' (புகாரி-6130)

அதுபோல நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சிறுவர்கள் விஷயத்தில் அக்கரை செலுத்துவார்கள். அவர்களுடன் விளையாடுவார்கள். மேலும் அவர்களுடன் அன்போடு நடந்து கொள்வார்கள். ஷத்தாத் பின் ஹாத்(ரலி) அறிவிப்பதாவது: 'நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மஃக்ரிப் அல்லது இஷா தொழுகையின்போது (தமது பேரக்குழந்தைகளில்) ஹஸன் அல்லது ஹுஸைனைத் தூக்கிக்கொண்டு எங்களிடம் வந்தார்கள். தொழுகைக்காக முன்னால் சென்று அக்குழந்தையை வைத்துவிட்டு அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொல்லி தொழுகை நடத்தினார்கள். நீண்ட நேரம் ஸஜ்தா செய்தார்கள். நான் என் தலையை உயர்த்திப் பார்த்தபோது நபியவர்களின் முதுகில் அக்குழந்தை இருந்தது. அவர்கள் ஸஜ்தாவில் இருந்தார்கள். பிறகு நான் ஸஜ்தாவுக்குத் திரும்பி விட்டேன். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தொழுது முடித்ததும், 'அல்லாஹ்வின் தூதரே! தாங்களுக்கு ஏதும் நிகழ்ந்துவிட்டதோ அல்லது வஹி ஏதும் தாங்களுக்கு அருளப்படுகின்றதோ என்று நாங்கள் எண்ணும் அளவுக்கு தாங்கள் நீண்ட நேரம் ஸஜ்தா செய்தீர்களே' என்று மக்கள் கேட்டனர். அதற்கவர்கள் 'அதெல்லாம் ஒன்றும் நிகழவில்லை. ஆயினும் என் பேரன் என் முதுகில் அமர்ந்திருந்தான்' அவன் தனது தேவையை நிறைவு செய்யும் வரை நான் அவசரப்பட விரும்பவில்லை' என்றார்கள். (பார்க்க: நஸயீ-1129)

அனஸ்(ரலி) அறிவிக்கிறார்கள்: 'நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மனிதர் களிலேயே அழகிய குணம் உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். அபு உமைரே! அந்தச் சின்னப் பறவை என்ன ஆனது? என என் சின்னஞ் சிறிய சகோதரனிடம் கேட்பார்கள்.'(பார்க்க: புகாரி-6203) அச்சிறுவன் அந்தப் பறவையுடன் விளையாடிக் கொண்டிருப்பான். அது இறந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் நபியவர்கள் அவ்வாறு கேட்டது அச்சிறுவனுக்கு ஆறுதலாக இருந்தது.